**செயலாளர், இராமநாதபுரம் விற்பனைக்குழு, இராமநாதபுரம் அவர்களின் செயல்முறை உத்தரவு**
**முன்னிலை:திரு.பொ.இராஜா,பி.எஸ்ஸி.,(விவ),எம்.பி.ஏ.,**

ந.கோ.எண் : அ/843/2020 நாள்:27-08-2021

பொருள்: பணி வரன்முறை - இராமநாதபுரம் விற்பனைக்குழு - இராமநாதபுரம் - திருமதி.வே.லட்சுமி - இளநிலை உதவியாளர் - தலைமை அலுவலகம் - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவக்கல் செய்து உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை: 1)செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்:2345/PSD-1/2020, நாள்:28-05-2020
2)இவ்வலுவலக செயல்முறை உத்தரவு எண்:அ/843/2020, நாள்:21-07-2020
3)திருமதி.வே.லட்சுமி, இளநிலை உதவியாளர், தலைமை அலுவலகம், இராமநாதபுரம் அவர்களின் பணிசேர் கடித நாள்:29-07-2021

---------------

**உத்தரவு:-**

பார்வை 1இல் கண்டுள்ள செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதத்தின்படி, திருமதி.வே.லட்சுமி அவர்கள் இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப்பட்டு இராமநாதபுரம் விற்பனைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2இல் கண்டுள்ள இவ்வலுவலக செயல்முறை உத்தரவின்படி இராமநாதபுரம் விற்பனைக்குழுவின் தலைமை அலுவலக இளநிலை உதவியாளராக 29-07-2020 முற்பகல் அன்று பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

திருமதி.வே.லட்சுமி அவர்களின் கல்வித் தகுதி மற்றும் பணி அமர்வு தொடர்பான பிற சான்றுகளின் உண்மைத்தன்மை மற்றும் உடல் தகுதிச் சான்றிதழ் சரிபார்க்கப்பட்டு உறுதி செய்யப்பட்டதின் அடிப்படையில் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணி விதி 23(a)(i)ன்படி திருமதி.வே.லட்சுமி அவர்கள் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 29-07-2020 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

பத்தி 2இல் உத்தரவிடப்பட்ட பணி வரன்முறையினைத் தொடர்ந்து திருமதி.வே.லட்சுமி அவர்கள் பணியேற்ற நாளான 29-07-2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் துவக்கியும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

மேலும், திரு.வே.லட்சுமி அவர்கள் 29-07-2020 முற்பகல் முதல் மூன்றாண்டு காலத் தொடர்பணிக்காலத்தில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும் என்றும், தகுதிகாண் பருவ காலத்தில் தனியர் துறைத்தேர்வு, மாவட்ட அலுவலக நடைமுறை நூல் ஆகிய தேர்வுகளில் தேர்வு பெறுவதுடன் பவானிசாகர் அரசு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும் என்றும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மேலே வரையறுக்கப்பட்ட தேர்வுகளை தகுதிகாண் பருவ துவக்க நாள் முதல் ஐந்து ஆண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெறத் தவறும்பட்சத்தில், இதே காரணத்திற்காக எவ்வித முன்னறிவிப்பு இன்றி தனியர் பணியிலிருந்து நீக்கப்படுவாரென்றும் இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

27/8/21

செயலாளர்
இராமநாதபுரம் விற்பனைக்குழு
இராமநாதபுரம்.

27/8/21

**பெறுநர்:-**

திருமதி.வே.லட்சுமி,
இளநிலை உதவியாளர்,
தலைமை அலுவலகம்,
இராமநாதபுரம் விற்பனைக்குழு, இராமநாதபுரம்.

**நகல்:-**

இருப்பு கோப்பு மற்றும் பணிப்பதிவேடு

A1-Sec 07.01.2021 onwards

CamScanner